தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.08.2013**

**நீலகிரி, கோவையில் கனமழைக்கு வாய்ப்பு: வால்பாறையில் 120 மி.மீ. மழை**

நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் ஆங்காங்கே செவ்வாய்க்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழையின் காரணமாக கேரள எல்லையோர தமிழக மாவட்டங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களில் உள்ள மலைத் தொடர்களில் செவ்வாய்க்கிழமை கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த மையத்தின் அதிகாரிகள் கூறியது: தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே மழை பெய்யும். நீலகிரி, கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் கனமழை பெய்யும்.

இந்நிலையில் ஆந்திர மாநிலம் மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு இடையில் மேற்கு மத்திய வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதன் காரணமாக அந்த மாநிலங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தில் பெய்த மழை அளவு (திங்கள்கிழமை காலை வரையிலான நிலவரம்- மி.மீ.):

வால்பாறை - 120, மானாமதுரை, குளச்சல், பெரியாறு - 60, உசிலம்பட்டி, சின்னக்கல்லாறு, ஊட்டி, பரமக்குடி, பேச்சிப்பாறை, இரணியல், சாத்தனூர் அணை, கும்பகோணம் - 50, காரைக்குடி, பெரியகுளம், செங்கோட்டை - 40, வலங்கைமான், கூடலூர், பாபநாசம், நாகர்கோவில், சோளிங்கர், ராமநாதபுரம், நடுவட்டம், செங்குன்றம் - 30, திருவிடைமருதூர், கன்னியாகுமரி, பூதப்பாண்டி, திருப்பத்தூர், நத்தம், சேலம், ஓமலூர், மேட்டூர், சிவகிரி, மணிமுத்தாறு, தென்காசி, பொன்னேரி, போடிநாயக்கனூர், விருதுநகர், தேவலா, திருமயம் - 20, நீடாமங்கலம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, சோழவரம், மாதவரம், அருப்புக்கோட்டை, ராஜபாளையம், சிவகாசி, சென்னை, செங்கம், சத்தியமங்கலம், ஊத்தங்கரை, சிவகங்கை, மதுரை, காட்டுமன்னார்கோயில், குடியாத்தம், வாலாஜா, காவேரிப்பாக்கம், ஏற்காடு - 10.

**விதைகள், பூச்சி மருந்துகளில் சந்தேகமா? தகவல் அறிய இலவச தொலைபேசி வசதி**

சம்பா சாகுபடி பணிகளை விவசாயிகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ள நிலையில், விதைகள், பூச்சி மருந்துகளில் உள்ள சந்தேகங்கள் குறித்து வேளாண்மைத் துறையிடம் கேட்டறியலாம்.

இதற்கான இலவச தொலைபேசி அழைப்பு வசதி (எண்: 1800-425-1501 2013) செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 6) முதல் அமைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

விவசாயிகள் சம்பா சாகுபடி பணிகளை மேற்கொள்ள வசதியாக சாகுபடிக்குத் தேவையான விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் ஆகிய இடுபொருட்கள் வேளாண்மை விரிவாக்க மையங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் விற்பனை மையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப செயல் திறனை அளிக்கும் வகையில், கிராம அளவில் முகாம்கள் நடத்தப்படுகின்றன. மாவட்ட மற்றும் வட்டார அளவில் தகவல் சேவை மையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

இலவச தொலைபேசி எண்: விதைகள், உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் போன்ற மிகவும் அவசியமான இடுபொருட்கள் குறித்த சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்குத் தீர்வு அளிக்கும் வகையில் வேளாண்மைத் துறை கட்டணமில்லாத தொலைபேசி அழைப்பு வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி வசதியை விவசாயிகள் செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 6) முதல் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை அனைத்து வேலை நாள்களிலும் பயன்படுத்தலாம்.

**காவிரியில் கூடுதல் நீர்வரத்து கொள்ளிடத்தில் 29,000 கன அடி தண்ணீர் திறப்பு**

காவிரியில் நீர்வரத்து அதிகமாகியுள்ளதால் கொள்ளிடம் ஆற்றில் திங்கள்கிழமை மாலை நொடிக்கு 29,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இது திங்கள்கிழமை இரவு அல்லது செவ்வாய்க்கிழமை காலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேட்டூர் அணை வேகமாக நிரம்பி வருவதால் காவிரியில் கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையிலிருந்து நொடிக்கு 80,967 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 121.07 அடியாகவும் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 1,35,726 கன அடியாக இருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 1,19,358 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

திருச்சி அருகே முக்கொம்பில் உள்ள மேலணையில் திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரப்படி நொடிக்கு 20,110 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இங்கிருந்து முற்பகல் 11.15 மணிக்கு கொள்ளிடத்தில் 3,000 கன அடியும் பிறகு 12 மணிக்கு 5,000 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

மாலை 4 மணி நிலவரப்படி மேலணைக்கு நீர்வரத்து நொடிக்கு 46,494 கன அடியாகவும், 6 மணிக்கு 53,800 கன அடியாகவும் உயர்ந்தது.

இதனால் காவிரியில் 25,752 கன அடியும், கொள்ளிடத்தில் 29,000 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதுதவிர முக்கொம்புக்கு மேற்கேயுள்ள பாசன கால்வாய்களிலும் அதன் கொள்ளளவுக்கு ஏற்ப தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளன.

இரவில் அதிகரிக்க வாய்ப்பு: மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை நள்ளிரவு முதல் நொடிக்கு 75,000 கன அடி முதல் 1 லட்சம் கன அடி வரை தண்ணீர் வர வாய்ப்புள்ளது.

இப்போது காவிரியில் திறக்கப்படும் 25,000 கன அடி தொடர்ந்து பராமரிக்கப்பட்டு, கூடுதலாக வரும் நீர் முழுவதும் கொள்ளிடத்தில் திறந்து விடப்படும்.

கொள்ளிடம் ஆற்றின் கொள்ளளவு 3 லட்சம் கன அடி என்பதால், வெள்ள பாதிப்புகள் ஏதுவும் தற்போது இல்லை என்றாலும், பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். நீர்வரத்து அதிகமாக இருப்பதால் ஆற்றில் குளிக்கக் கூடாது என பொதுப்பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

8 ஆண்டுகளுக்குப் பிறகு கொள்ளிடத்தில் தற்போது கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005-ம் ஆண்டில் மேட்டூர் அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் வந்ததால் கொள்ளிடத்தில் அதிக அளவில் தண்ணீர் திறக்கப்பட்டது.

கல்லணை: கல்லணையைப் பொருத்தவரையில், தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டப் பாசனப் பகுதிகளுக்கு திங்கள்கிழமை மாலை நிலவரப்படி காவிரியில் 7,001 கன அடியும், வெண்ணாற்றில் 2,000 கன அடியும், கல்லணைக் கால்வாயில் 3,514 கன அடியும், கொள்ளிடத்தில் 6,000 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் சங்க அலுவலகம் திறப்பு**

திருச்செந்தூரில் விவசாயிகள் சங்க அலுவலகம் திறக்கப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் தாலுகா குழு, திருச்செந்தூர் தெற்கு ரதவீதியில் விவசாயிகள் சங்க அலுவலகம் திறக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு சங்கத் தலைவர் வழக்குரைஞர் வி.நடேசஆதித்தன் தலைமை வகித்தார். தாலுகா செயலர் எம்.ராஜா, பொருளாளர் வி.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் மோகன்ராஜ் அலுவலகத்தை திறந்து வைத்தார். தமிழ்நாடு விவசாய சங்க மாவட்டச் செயலர் எஸ்.நல்லையா கொடியேற்றிவைத்தார். நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்டத் தலைவர் மாடசாமி, மாவட்டச் செயலர் கிருஷ்ணராஜ், கன்வீனர் பரமசிவன், மாதர் சம்மேளன நிர்வாகி மெடனாள் மாடசாமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக விவசாய சங்க மாவட்டத் தலைவர் எஸ்.எம்.ராமையா வரவேற்றார். சங்க தாலுகா துணைச்செயலர் அ.கோவிந்தன் நன்றி கூறினார்.

**கால்நடை ஆராய்ச்சி மையத்தில் பசுந்தீவன வளர்ப்பு கருத்தரங்கம்**

திருவண்ணாமலையில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் பசுந்தீவன வளர்ப்பில் நவீன தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கம் சனிக்கிழமை நடைபெற்றது.

ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் சு.ராமகிருஷ்ணன், உதவிப் பேராசிரியர் ரா.ராஜ்குமார் ஆகியோர் கால்நடை வளர்ப்பில் தீவனப்

பயிர்களின் முக்கியத்துவம், தீவனப் பயிர்களின் வகைகள், ரகம், விதையளவு, இடைவெளி, தீவனப் பயிருக்கு போட வேண்டிய அடியுரம், மேலுரம், தீவனப் பயிர்களின் அறுவடை நாள்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினர்.

இப் பயிற்சியில் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து 56 பயனாளிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்குத் தேவையான தீவனப் பயிர்கள், விதைகள், தாது உப்புகள், கால்நடை வளர்ப்பு பற்றிய புத்தகங்கள், குறுந்தகடுகள் வழங்கப்பட்டன.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 83.02 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 83.02 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 9,585 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 950 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 17.34 டி.எம்.சி.

**பி.ஏ.பி. விவசாயிகளைக் காக்க நல்லாறு திட்டம் செயல்படுத்தப்படுமா?**

பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத் திட்ட (பி.ஏ.பி) விவசாயிகளைக் காப்பதற்கும், உபரி நீரை சேமிக்கவும், நல்லாறு அணை கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகளிடம் வலுவடைந்து வருகிறது.

மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் அபரிமிதமாகப் பெய்யும் மழை நீரைச் சேகரித்து, தமிழகம், கேரள மாநிலங்கள் பயன்படுத்தும் வகையில் பி.ஏ.பி. திட்ட ஒப்பந்தம், கடந்த 1958-இல் ஏற்படுத்தப்பட்டது.

ஒப்பந்தப்படி, ஓராண்டில் சோலையாறு, ஆழியாறு அணைகளில் இருந்து மொத்தம் 19.55 டி.எம்.சி. தண்ணீரை கேரளத்துக்கு தமிழகம் வழங்க வேண்டும். இந்

நிலையில், வறட்சிக் காலத்தின்போது ஏற்படும் நீர்ப் பங்கீடு தொடர்பாக இரு மாநில அரசுகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், கடும் வறட்சி ஏற்பட்டது. ஆனால், இந்த ஆண்டில் பருவமழை உரிய நேரத்தில் பெய்ததால், சோலையாறு, பரம்பிக்குளம், ஆழியாறு அணைகள் நிரம்பி, உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதுவரை சுமார் 3 டி.எம்.சி.க்கும் மேல் தண்ணீர் வெளியேற்றப்பட்டிருக்கும் எனக் கூறப்படுகிறது.

நாட்டிலேயே சிரபுஞ்சிக்கு அடுத்தபடியாக மழை பெய்யும் அப்பர் நீராறு அணைப் பகுதியில் தென்மேற்கு பருவமழைக் காலங்களில் பெய்யும் மழை நீரை தமிழகமும், அக்.1-ஆம் தேதி முதல் ஜன. 31-ஆம் தேதி வரை பெய்யும் வடகிழக்கு பருவமழையைக் கேரள அரசும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பர் நீராறு அணையில் இருந்து சோலையாறு அணைக்கு வரும் தண்ணீர் அங்கிருந்து பரம்பிக்குளம் அணைக்குச் சென்று சுரங்கப்பாதை வழியாக சர்க்கார்பதியில் இருந்து கான்டூர் கால்வாய் மூலம் திருமூர்த்தி அணைக்குச் செல்கிறது. இயற்கைச் சீற்றங்களின்போது அடர்ந்த வனப்பகுதியில் உள்ள கான்டூர் கால்வாயில் சேதம் ஏற்பட்டால், திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் செல்லாது. இதனால் விவசாயம் கடுமையாகப் பாதிக்கும் சூழ்நிலை உள்ளது.

இப்போதுள்ள சூழ்நிலையில் சோலையாறு அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் செல்ல வேண்டுமென்றால், சுமார் 100 கி.மீ. பயணம் செய்தாக வேண்டும். கான்டூர் கால்வாய் வழியாக செல்லும்போது தண்ணீர் வீணாவதைத் தவிர்க்க முடியாது.

இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வகையில், அப்பர் நீராறு அணையில் இருந்து வரும் தண்ணீரை தேக்குவதற்காக நல்லாறு அணையைக் கட்ட வேண்டும் என்ற கோரிக்கை விவசாயிகளிடம் வலுத்து வருகிறது. அப்பர் நீராறில் இருந்து நல்லாறு அணைக்கு தண்ணீர் செல்வதற்கு 14.4 கி.மீ. தொலைவுக்கு சுரங்கப்பாதை

அமைக்க வேண்டும். நல்லாறு அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்குத் தண்ணீர் செல்வதற்கு 4 கி.மீ. தொலைவுக்குக் கால்வாய் அமைத்தால் போதுமானது. இதன் மூலம் 250 மெகாவாட் மின்சாரமும் உற்பத்தி செய்ய முடியும்.

இதுதொடர்பாகத் திருமூர்த்தி நீர் தேக்கத் திட்டக் குழுத் தலைவர் மெடிக்கல் பரமசிவம் கூறியது:

கான்டூர் கால்வாயில் புனரமைப்புப் பணி நடைபெறுகிறது. இந்தப் பணி நிறைவடைந்த பிறகே திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கிடைக்கும். எனவே, நல்லாறு அணையைக் கட்டினால், தண்ணீர் வரும் தூரமும் குறையும்; வீணாகும் தண்ணீரின் அளவும் குறையும். இதற்கு கேரள அரசிடமும் ஒப்புதல் பெற வேண்டியதில்லை.

விவசாயிகளின் பிரச்னையை முழுமையாகப் போக்குவதற்கும், உபரி நீர் வீணாகக் கடலில் கலப்பதைத் தடுப்பதற்கும் நல்லாறு அணையைக் கட்ட வேண்டும். இதற்குத் தமிழக அரசு உடனடியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**லோயர் நீராறில் 160 மி.மீ. மழை**

லோயர் நீராறு அணைப் பகுதியில் திங்கள்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 160 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சோலையாறு 38, பரம்பிக்குளம் 18, அப்பர் நீராறு 52, வால்பாறை 31, மணக்கடவு 1.1, சர்க்கார்பதி 6, தூணக்கடவு 4, பெருவாரிப்பள்ளம் 3, காடம்பாறை 2, சின்கோனா 128.

**மழை நீர் சேகரிப்புவிழிப்புணர்வுப் பேரணி**

சிங்கம்புணரியில் பேரூராட்சி சார்பில் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி திங்கள்கிழமை நடைபெற்றது.

பேரூராட்சி அலுவலகத்தில் தொடங்கிய இப்பேரணிக்கு தலைவர் லெட்சுமிபிரியா ஜெயந்தன் தலைமை வகித்து தொடக்கி வைத்தார். செயல் அலுவலர் மருது முன்னிலை வகித்தார்.

பேரணியில் மழை நீர் சேகரிப்பு, பிளாஸ்டிக் பொருள்களை பயன்படுத்தக் கூடாது என்பன உள்ளிட்ட பதாகைகளை மாணவர்கள் ஏந்திச் சென்றனர். மேலும் மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு குறித்து கோஷமிட்டனர்.

பேரணி பெரிய கடை வீதி, அரசு மருத்துவமனை, சுந்தரம் நகர், திண்டுக்கல் சாலை வழியாக பேரூராட்சி அலுவலகத்தை சென்றடைந்தது. இதில் பேரூராட்சி துணைத் தலைவர் தொல்காப்பியன், கவுன்சிலர்கள் சதீஷ்குமார், குணசேகரன், நித்தியா, ரேவதி மணிவண்ணன், சரவணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.08.2013**

## பாபநாசம், சேர்வலாறுஅணைகளின் நீர்மட்டம் உயர்வு

விக்கிரமசிங்கபுரம்:காரையார் மேற்கு தொடர்ச்சி மலை வனப் பகுதிகளில் பெய்த மழையின் காரணமாக பாபநாசம் மற்றும் சேர்வலாறு அணைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 126.75 அடியாக இருந்த பாபநாசம் அணையின் நீர் மட்டம் நேற்று சுமார் 1 அடி அதிகரித்து 127.85 அடியானது. அணைக்கு விநாடிக்கு 3015.16 கன அடிநீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 1504.75 கன அடி நீர் வெளியேறியது. அணை பகுதியில் 17 மி.மீ., பாபநாசம் கீழ் அணையில் 25 மி.மீ., சேர்வலாறு அணையில் 8 மி.மீ., மணிமுத்தாறில் 17.4 மி.மீ., அம்பையில் 2 மி.மீ., அளவில் மழையின் அளவு பதிவாகியுள்ளது. நேற்று சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 133.20 அடியும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 65.75 அடியாகவும் இருந்தது.

## விவசாயிகள் குறைதீர்வு கூட்டம்வரும் 16ம் தேதி நடக்கிறது

காஞ்சிபுரம்:விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம், வரும் 16ம் தேதி நடைபெற உள்ளது என, மாவட்ட ஆட்சியர் சித்தரசேனன் தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை:

காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறை தீர்வு கூட்டம், ஆகஸ்டு 16ம் தேதி, மாவட்ட ஆட்சியர் தலைமையில், ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. இதில், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களின் குறைகளை,

கோரிக்கை மனுவாக அளிக்கலாம்.இவ்வாறு, அறிக்கையில் ஆட்சியர் தெரிவித்து உள்ளார்.

## செஞ்சி பகுதியில் பருவ மழை பொய்த்ததால்நாற்று விடுவதற்கு விவசாயிகள் தயக்கம்

செஞ்சி:ஆடிப்பட்டத்தின் போது பொன்னி நெல் நாற்று விடும் செஞ்சி பகுதி விவசாயிகள் பருவ மழை பொய்த்து போனதால் நாற்று விடுவதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக செஞ்சி பகுதியில் பருவ மழை பொய்த்து போனதால் ஏரிப்பாசனம் மட்டும் இன்றி கிணற்று பாசனமும் கடுமையாக பாதிக்கப்பட்டது.கடந்த ஆண்டு கிணற்று நீரை நம்பி பயிர் செய்த நிலங்களில் அறுவடை நெருங்கிய நேரத்தில் கிணற்று நீர் வற்றியது. வெளியிடங்களில் இருந்து டேங்கரில் தண்ணீர் எடுத்து வந்து பயிரை காப்பாற்றினர்.வறட்சி காரணமாக மே, ஜூன் மாதத்தில் செஞ்சி தாலுகாவில் ஆயிரக்கணக்கான நெல், கரும்பு பயிர்கள் காய்ந்து போனது.ஜூலை மாதத்தில் பொழிய வேண்டிய தென்மேற்கு பருவ மழையும் மிக சொற்பமாக பெய்தது. இதனால் ஏரி, குளங்கள் காய்ந்து கிடக்கின்றன.சாதாரண உபயோகத்திற்கும், குடிநீருக்கும் தண்ணீர் பயன்பாடு அதிகரித்திருப்பதால் நிலத்தடி நீரும் உறிஞ்சப்பட்டு, செஞ்சி பகுதியில் வீட்டு உபயோக கிணறுகளும் காய்ந்து விட்டன. செஞ்சி நகரம் உட்பட பல கிராமங்களில் குடிநீருக்கே அவதிப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.வழக்கமாக ஆடி பட்டத்தின் போது பொன்னி நெல் நடவு செய்வதில் ஆர்வம் காட்டும் செஞ்சி பகுதி விவசாயிகள் ஆடி 18ம் தேதி நாற்று விடுவது வழக்கம்.இந்தாண்டு நாற்று விடுவதற்கும், ஏர் ஓட்டுவதற்கும் பல கிணறுகளில் தண்ணீர் இல்லை. தண்ணீர் இருக்கும் கிணறுகளிலும் அடுத்த சில நாட்களில் வறண்டு விடும் என்ற எண்ணம் விவசாயிகளிடம் எழுந்துள்ளது.இதனால் பெரும்பாலான விவசாயிகள் ஆடிப்பட்டத்தில் பொன்னி

நெல் விதைப்பை இந்த ஆண்டு மேற்கொள்ளவில்லை.அடுத்து வரும் நாட்களில் மழை கை கொடுத்தால் மட்டுமே நாற்று விட முடியும் என்ற நிலை உருவாகி உள்ளது. மழை பொய்த்து போனது செஞ்சி பகுதி விவசாயிகளை கடும் கவலையில் ஆழ்த்தி உள்ளது.

## விவசாயிகள் வாங்கும் வேளாண் விதைகளுக்கு ரசீது வழங்காத விற்பனையாளர் மீது நடவடிக்கை

விழுப்புரம்:விவசாயிகள் வாங்கும் விதைகளுக்கு ரசீது வழங்காத விற்பனையாளர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென விதை ஆய்வு துணை இயக்குனர் குணசேகர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் விதை ஆய்வு துணை இயக்குனர் குணசேகர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:சம்பா பருவத்திற்கு மேம்படுத்தபட்ட வெள்ளை பொன்னி, பி.பிட்டி 5204, ஏ.டி.டீ.39, திருச்சி.1 ரக நெல் நாற்று விடும் பணியில் தற்போது விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். உரிமம் பெற்ற விதை விற்பனை நிலையங்கள் மூலம் விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை மட்டுமே வாங்கி பயன்படுத்த வேண்டும்.விதை மூட்டைகள் மேல் நீலநிற சான்றட்டை அல்லது வெள்ளை நிற ஆதார அட்டை மற்றும் வெளிர் பச்சைநிற உற்பத்தியாளர் விபர அட்டை ஆகிய இரு அட்டைகள் பொருத்திய நெல் விதை மூட்டைகள் மட்டுமே விவசாயிகள் வாங்க வேண்டும்.உற்பத்தியாளரின் விபர அட்டை மட்டும் பொருத்திய மூட்டைகள் வாங்கும் போது குறைந்த பட்ச முளைப்பு திறன் மற்றும் இனத்தூய்மை உள்ளதாவென உறுதி செய்ய வேண்டும். விற்பனை நிலையங்களிலிருந்து விதை வாங்கும் போது அதற்குரிய பில்களை விவசாயிகள் கேட்டு வாங்க வேண்டும். அவ்வாறு பெறும் ரசீதில் நெல் ரகத்தின் பெயர், குவியல் எண், காலாவதி தேதி ஆகிய விபரங்களை குறிப்பிட்டு வாங்க வேண்டும். விதை முளைப்பு திறன் மற்றும் இனத்தூய்மை குறைவாக இருந்தால் விவசாயிகள் வாங்கும் ரசீதுகள் மூலமே இழப்பீடு தொகை பெற முடியும்.விற்பனை நிலைய உரிமையாளர்கள் விற்பனை செய்யும் விதைகளுக்குரிய அனைத்து விபரங்களை குறிப்பிட்டு ரசீது வழங்க

வேண்டும். தவறினால், விற்பனையாளர்கள் மீது விதைகள் கட்டுபாட்டு ஆணைப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.விவசாயிகள் ரசீது வழங்காத விற்பனையாளர்கள் பற்றிய தகவல்களை 04146-220602 என்ற தொலைபேசி எண் அல்லது விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகம், மாவட்ட பெருந்திட்ட வளாகம், விழுப்புரம் என்ற முகவரியில் தெரிவித்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். இவ்வாறு விதை ஆய்வு துணை இயக்குனர் குணசேகர் தெரிவித்துள்ளார்.

## செம்மை கரும்பு சாகுபடி குறித்த ஆலோசனை

அவலூர்பேட்டை:செம்மை கரும்பு சாகுபடியில் விவசாயிகள் இரண்டு மடங்கு மகசூலை கூடுதலாக பெறுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.மேல்மலையனூர் ஒன்றியம் மேல்நெமிலியில் கரும்பு விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு தலைமை தாங்கி பேசியதாவது:விவசாயிகள் செம்மை கரும்பு சாகுபடி செய்தால், இரட்டிப்பு மகசூலை கூடுதலாக பெறலாம். 250 ஏக்கர் நிலத்தில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்படி செம்மை கரும்பு சாகுபடி செய்யவும், சொட்டு நீர் பாசனம் அமைக்கவும், நீரில் கரையும் உரங்கள் மானியத்தில் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.விவசாயிகள் அதிக வருவாய் மற்றும் மகசூல் அடைய பண்ணைய முறைகளை செயல் படுத்த வேண்டும்.உபரி வருவாய் மற்றும் மண் வளம் பெருக்கிட ஊடு பயிர் வைக்க வேண்டும்.இவ்வாறு பழனிவேலு பேசினார்.இதில் கரும்பு ஆய்வாளர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கோழி முட்டை, இறைச்சி உற்பத்தி 2020ல் மூன்று மடங்கு அதிகரிக்கும் பல்கலை பதிவாளர் ஹரிகிருஷ்ணன் தகவல்

நாமக்கல்: ""வரும், 2020ம் ஆண்டில், கோழி முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி, இரண்டு முதல் மூன்று மடங்கு அதிகரிப்பதுடன், அதிக வேலை வாய்ப்பை பெற்றுத்தரும்,'' என கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பதிவாளர்

ஹரிகிருஷ்ணன் கூறினார்.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், கோழியின நோய்களுக்கான சர்வதேச கருத்தரங்கு துவங்கியது.

கல்லூரி முதல்வர் துரைசாமி தலைமை வகித்தார். கருத்தரங்கு தலைவர் பேராசிரியர் பாலசந்திரன் வரவேற்றார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை பதிவாளர் ஹரிகிருஷ்ணன், கருத்தரங்கை துவக்கி வைத்து, கருத்தரங்கு மலரை வெளியிட்டு பேசியதாவது:

வரும், 2020ம் ஆண்டில், கோழி முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி, இரண்டு முதல், மூன்று மடங்கு அதிகரிப்பதுடன், அதிக வேலை வாய்ப்பையும் பெற்றுத்தரும். தீவன விலை உயர்வு மற்றும் திடீரென ஏற்படும் நோய் கிளர்ச்சி, கோழிப்பண்ணை தொழிலில் இடைஞ்சல்களை ஏற்படுத்தி வருகிறது.

சமீபத்தில் பரவிய பறவை காய்ச்சல் நோயால், 1,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. பறவை காய்ச்சல் நோயை பரப்புவதில், வெளிநாட்டில் இருந்து வரும் பறவைகளும் முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால், நம் நாட்டின் பறவை மட்டும் அல்லாமல், வெளிநாட்டில் இருந்து வரும் பறவைகளையும் கண்காணிக்க வேண்டும்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் கண்டுபிடிப்பான வெள்ளை கழிச்சல் நோய்க்கான வெப்பத்திலும், நிலையான வாய்வழி குருணை தடுப்பு மருந்து வெள்ளைக் கழிச்சல் நோயை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும்.

இவ்வாறு அவர் பேசினார்.

அமெரிக்காவில், கலிபோர்னியா பல்கலை பேராசிரியர் சிவபிரசாத், வெர்ஜினியா பல்கலை இணை பேராசிரியர் இளங்குமரன் ஆகியோர் பேசினர்.

இக்கருத்தரங்கில், நோய் குறியியல் துறை பேராசிரியர் பாலசுப்ரமணியம், 60க்கும்

மேற்பட்ட தொழில் நுட்ப வல்லுனர்கள், பேராசிரியர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தானிய உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு சாகுபடி பரப்பளவு உயர்ந்துள்ளதால்.

புதுடில்லி:நடப்பு 2013-14ம் வேளாண் பருவத்தில், நாட்டின் தானிய உற்பத்தி, ஒட்டு மொத்த அளவில் அதிகரிக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.உள்நாட்டில் பல மாநிலங்களில், பருவமழை மிகச் சிறப்பான அளவில் பெய்து வருவதால், சாகுபடி பரப்பளவு, கடந்தாண்டை விட, நடப்பாண்டில் உயர்ந்து உள்ளது.

**நெல் சாகுபடி:**இதையடுத்து, நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட, பல்வேறு தானியங்களின் உற்பத்தி, அதிகரிக்க வாய்ப்புள்ளது என, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டு உள்ள புள்ளிவிவரத்தில் தெரி விக்கப் பட்டுள்ளது.உள்நாட்டில், கரீப் மற்றும் ரபி ஆகிய இரு பருவங்களில் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. நடப் பாண்டு கரீப் பருவத்தில், மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, பஞ்சாப் உள்ளிட்ட பல மாநிலங்களில், மழைப் பொழிவு சாதாரண அளவை விட, கூடுதலாக பெய்துள்ளது. குறிப்பாக, நடப்பாண்டு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில், சாதாரண அளவை விட, கூடுதலாக, 17 சதவீதம் அளவிற்கு மழை பெய்துள்ளது.

**மேற்கு வங்கம்:**இருப்பினும், நாட்டின் கிழக்கு மாநிலங்களான, ஒடிசா, மேற்கு வங்கம், ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் மழை பொழிவு குறைவாக உள்ளது. தற்போது தான், மேற்கண்ட மாநிலங்களில், முழு வீச்சில், நடவு பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.இது குறித்து, மத்திய நெல் ஆராய்ச்சி பயிலகம் வெளியிட்டு உள்ள புள்ளிவிவரம்:

நடப்பு கரீப் பருவத்தில், சென்ற வாரம் வரையிலுமாக, 2.40 கோடி ஹெக்டேரில், நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு உள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்டதை (2.31 கோடி ஹெக்டேர்) விட, 3.51 சதவீதம்

அதிகமாகும்.பொதுவாக கரீப் பருவத்தில்,4.40 கோடி ஹெக்டேரில், நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். நாட்டின் மொத்த நெல் சாகுபடியில், கரீப் பருவத்தில் மட்டும், 88 சதவீதம் அளவிற்கு நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.இவ்வாறு புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2012-13ம் வேளாண் பருவத்தில், நாட்டின் சில மாநிலங்களில் பருவ மழை குறைந்திருந்த நிலையிலும், அவ்வாண்டில், நெல் உற்பத்தி, 10.40 கோடி டன்னாக இருந்தது. இதில், கரீப் பருவத்தில் மட்டும், 9 கோடி டன் நெல் உற்பத்தியானது என்பது குறிப்பிடத்தக்கது.

**பருப்பு வகைகள்:**இந்நிலையில், கடந்த 2009-10ம் வேளாண் பருவத்தில், பருவமழை பொய்த்ததால், நெல் உற்பத்தி, அதற்கு முந்தை பருவத்தை விட, 14 சதவீதம் குறைந்து, 8.91 கோடி டன்னாக இருந்தது.நடப்பு கரீப் பருவத்தில், பருவ மழை நன்கு உள்ளதால், நெல் சாகுபடி பரப்பளவு மட்டுமின்றி, பருப்பு வகைகள் சாகுபடி பரப்பளவும், சென்ற வாரம் வரையிலுமாக, 26 சதவீதம் அதிகரித்து, 79 லட்சம் ஹெக்டேராக உயர்ந்து உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலத்தில், இதன் சாகுபடி பரப்பளவு, 62 லட்சம் டன்னாக மிகவும் குறைந்திருந்தது.

**எண்ணெய் வித்துக்கள்:**உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி இல்லா ததால், நம்நாடு சமையல் எண்ணெய் வகைகளை அதிகளவில் இறக்குமதி செய்து கொள்கிறது. இச்சூழ்நிலையில், நடப்பு கரீப் பருவத்தில், சாதகமான தட்பவெப்பசூழ்நிலையால், எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு, சென்ற வார இறுதி வரையிலுமாக, 1.73 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில், 1.49 கோடி ஹெக்டேராக இருந்தது.

தமிழகத்திலும், நடப்பு வேளாண் பருவத்தில், தானிய உற்பத்தி, அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. பல அணை களில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. வட

கிழக்கு பருவமழை நன்கு அமையும் நிலையில், தமிழகத்திலும் இவ்வாண்டு நெல் உள்ளிட்ட தானியங்கள் உற்பத்தி நன்கு இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

## நெல்லி, எலுமிச்சை சாகுபடி விவசாயிகள் அதிக ஆர்வம்

தேனி : நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடியில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தேனி மாவட்டத்தில், சப்போட்டா, மா, நெல்லி, எலுமிச்சை, மாதுளை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறை அதிகளவு மானிய உதவிகள் வழங்கி வருகிறது. ஆனால் சப்போட்டா, மா சாகுபடி செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இந்த பழங்களுக்கு சேமிப்பு வசதிகளும், விற்பனை வசதிகளும் இல்Øலை. விலையும் கிடைப்பதில்லை. நெல்லி, எலுமிச்சை, மாதுளைக்கு நல்ல மார்க்கெட் வசதி உள்ளது. இவற்றிற்கு அதிகளவு விலை கிடைப்பதோடு, விற்பனை வசதிகளும் உள்ளது. சேமிப்பதிலும் பிரச்னை இல்லை. இதனால் சமீப காலமாக மா, சப்போட்டா சாகுபடி செய்த விவசாயிகள் கூட நெல்லி, மாதுளை, எலுமிச்சை சாகுபடிக்கு மாறி வருகின்றனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 06.08.2013

**மிளகாய், காய்கறி விதைகள் மானியத்தில் விநியோகம் தோட்டக்கலை உதவி இயக்குனர் தகவல்**

விவசாயிகளுக்கு மானிய விலை யில் விநியோகம் செய்யப் பட்டு வருகின்றன என தோ ட்டக்கலை துறை உதவி இயக்குனர் ஆறுமுகம் தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது; ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் மிளகாய், காய்கறி பயிரிட்டுள்ளனர். நயினார்கோவில், பாண்டியூர், அரசரடிவண்டல், அக்ரமேசி, சின்னஅக்ரமேசி, புதுக்குடியிருப்பு, மந்திவலசை, கே.வல சை, கல்லடியேந்தல், மும்முடிசாத்தான், பகைவென்றி, மெய்யனேந்தல் உள்ளிட்ட கிராமங்களில் வெண்டை, கத்தரிக்காய், பாகல், மிளகாய், கொத்தவரை மற்றும் காய்கறி வகைகளை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். மேலும், வைட்டமின் சத்து நிறைந்த அரைக்கீரை, தண்டுக்கீரை, பாலாகீரை, சிறுகீரை, அகத்தி, கொத்தமல்லி, புதினா ஆகியவையும் இப்பகுதிகளில் நன்கு விளைகின்றன. ஆர்வமுள்ள விவசாயிகளுக்கு கீரை விதைகள் இலவசமாக வழங்கப்படும். காய்கறி விதைகள் 50 சதவீத மானியத்தில் விற்பனை செய்யப்படுகின்றன. நயினார்கோவில் வட்டார விவசாயிகள் தோட்டக்கலை துறை சார்பில் இவ்விதைகளை பெற்று பயனடையலாம்.

ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கே,1 மிளகாய், பீர்க்கு, புடலை, பாகல், சுரை, பூசணி ஆகிய ஒட்டு ரக விதைகள், செடி முருங்கை, தர்பூசணி, பொறியல் தட்டைப்பயறு, சக்தி வெண்டை போன்ற உயர் விளைச்சல்

ரக விதைகளும் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் விற்பனை செய்யப்படுகிறது, நயினார்கோவில் உதவி தோட்டக்கலை அலுவலர் நாகராஜன் மற்றும் அட்மா திட்ட தொழில் நுட்ப வல்லுநர் ஏகாம்பரம் ஆகியோரை தொடர்புகொண்டு விவசாயிகள் மானிய விலையில் விதைகளை பெற்று பயன் பெறலாம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பரமக்குடி பகுதியில் பருத்தி செடிகளை தாக்கும் இலை?சுருட்டல் நோய்**

பரமக்குடி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் பருத்தி செடிகளில் இலை சுருட்டல் நோய் தாக் குதல் அதிகரித்து வருகிறது. இதனால் விவசாயிகள் வேதனையில் உள்ளனர். பரமக்குடி மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் விவசாயிகள் பருத்தி பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் பருத்தி செடியை சாறு உறிஞ்சும் பூச்சிகள், இலைகளை தின்னும் பூச்சிகள் தாக்குவதால் அதிக மகசூல் இழப்பு ஏற்படுகிறது. எஸ்.காவனூர், மேலாய்குடி, பாண்டி கண்மாய் உள்ளிட்ட பல கிராம பகுதிகளில் பயிர் செய்யப்பட்ட பருத்தி செடிகளை இலை சுருட்டல் நோய் தாக்கி வருகிறது. இந்நோய் தாக்குதலுக்கு உள்ளாகும் பருத்திசெடியின் இலைகள் பழுத்து சுருண்டு விடுகின்றன. இதனால் அந்த செடியில் காய் பிடிப்பது கிடையாது. செடியில் உள்ள பூக்களும் உதிர்ந்து விடுகின்றன. இதனால் பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், “ஏற்கனவே மழை இல்லாத காரணத்தினால் பருத்தி செடிகளின் வளர்ச்சி குறைந்து வருகிறது. இந்நிலையில் பருத்தி செடியை கற்றாழம் எனப்படும் பூச்சி கடிப்பதால் இலை சுருட்டை நோய் தாக்குகிறது. இந்த நோய் தாக்குதலினால் பருத்தி விளைச்சல் குறைந்து வருகிறது. நோயின் தாக்குதலில் இருந்து மிஞ்சியுள்ள செடிகளில் நோய் எதிர்ப்பு சக்தி

மருந்தான பசூக், கிரிபோஸ் போன்றவற்றை கலந்து அடித்து வருகிறோம். இலை சுருட்டல் நோயில் இருந்து பருத்தியை பாதுகாக்க தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்“ என்று கூறினர்.

**உமி, பிண்ணாக்கு இறக்குமதிக்கு சுங்கவரி முழுவதும் ரத்து**



நெல் உமி, பிண்ணாக்கு இறக்குமதிக்கு விதிக்கப்படும் சுங்கவரி ரத்து செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்பு 15% சுங்கவரி விதிக்கப்பட்டது. நெல் உமி, தவிட்டு பிண்ணாக்குக்கு விதிக்கப்படும் சுங்கவரி முழுவதும் ரத்து செய்யப்படுகிறது. இது அக்டோபர் 1ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது என்று மத்திய நிதி அமைச்சகம் அறிவித்துள்ளது. இதனால், பாகிஸ்தான் வங்காளதேசம் ஆகிய நாடுகளில் இருந்து நெல் உமி, தவிட்டு பிண்ணாக்கு இறக்குமதி செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

விலை நிலவரத்தை பொருத்து சுமார் 50,000 டன்னிலிருந்து ஒரு லட்சம் டன்கள் வரை நெல் உமி மற்றும் தவிட்டு பிண்ணாக்கு இறக்குமதி செய்யப்படலாம் என்று (எஸ்இஏஐ) அமைப்பின் செயல் இயக்குநர் பி.வி. மேத்தா தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**06.08.2013**

**தமிழ்நாட்டில் தென் மாவட்டங்களில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும்**

சென்னை,

தென்மேற்கு பருவமழை கர்நாடகம், ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களில் பெரிய அளவில் பெய்துவருகிறது. தமிழ்நாட்டிலும் சில இடங்களில் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது.

இன்று தமிழ்நாட்டில் தென்மாவட்டங்களில் அநேக இடங்களிலும், நீலகிரி, கோவை மாவட்டங்களில் கனமழை பெய்ய உள்ளது என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.

நேற்று காலை 8–30மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர மழை அளவு வருமாறு:–

வால்பாறை 12 செ.மீ., சேந்தமங்கலம், மானாமதுரை, கொளச்சல், பெரியார் தலா 6 செ.மீ., உசிலம்பட்டி, சின்னக்கல்லார், உத்தமபாளையம், பரமக்குடி, பேச்சிப்பாறை, இரணியல், சாத்தனூர் அணை, கும்பகோணம் தலா 5 செ.மீ. பெய்துள்ளது.

மேலும் 100 இடங்களுக்கு மேல் மழை பரவலாக பெய்துள்ளது.